## 8.44 பொதுப் பணிகள் – பணியில் இருக்கும் போது இயற்கை எய்திடும் அரசு ஊழியர்களின் வாரிசு – மகன் / திருமணமாகாத மகள், தத்து எடுத்த மகன் / தத்து எடுத்த மணமாகாத மகள், ஆதரவற்ற விதவை மகள் / கணவரால் கைவிடப்பட்ட மகள் ஆகியோருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் – அதிகபட்ச வயதை 30–லிருந்து 35 ஆக உயர்த்தி ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யு 1) துறை,

அரசாணை (நிலை) எண். 9 நாள் : 19.1.1998

படிக்கப்பட்டது :

1. அரசாணை நிலை எண் 1579, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.7.81.
2. அரசாணை நிலை எண். 120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.6.95.

**ஆணை :**

பணியிலிருக்கும்பொழுது இயற்கை எய்திடும் அரசு பணியாளர்களின் வாரிசுகளுக்கு கருணையின் அடிப்படையில் பணி நியமனம் வழங்கும் திட்டம் 1972–ல் தொடங்கப்பட்ட பொழுது கருணை அடிப்படையில் நியமனம் பெற மகன் / மணமாகாத மகள் ஆகியோருக்கு உயர்ந்தபட்ச வயது 30 எனவும் விதவையருக்கு 31 எனவும் நிர்ணயம் செய்யப்பட்டது. இறுதியாக 1995–ல் விதவை மற்றும் மனைவியை இழந்த கணவர் ஆகியோரின் உச்ச வயது வரம்பு 40–லிருந்து 50–ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது.

2. தற்போது நடைமுறையிலுள்ள அரசு பணி விதிகளின்படி (Service Rules) பல்வேறு பணிகளுக்கும் உச்ச வயதுவரம்பாக 28 முதல் 35 வரை உள்ளது. எனவே மகன் / மணமாகாத மகள் ஆகியோர் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வயது வரம்பினை 30–லிருந்து 35–ஆக நிர்ணயம் செய்ய அரசு முடிவெடுத்துள்ளது.

3. மேலே பத்தி 2–ல் குறிப்பிட்ட முடிவுகளின் அடிப்படையில் இறந்த அரசு ஊழியரின் மகன் / மணமாகாத மகள் / தத்து எடுத்த மகன் / தத்து எடுத்த மணமாகாத மகள், ஆதரவற்ற விதவை மகள், கணவரால் கைவிடப்பட்ட மகள் ஆகியோரின் கருணை அடிப்படையில் பணி நியமனம் பெறுவதற்கு அதிகபட்ச வயதை 30–லிருந்து 35–ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

4. இத்திட்டத்தின் கீழ் தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய அனைத்து விதிகளும் இந்த ஆணையினால் பயன்பெறவிருக்கும் நபர்களின் பொருட்டு தொடர்ந்து கடைபிடிக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 3–ல் வெளியிடப்பட்ட ஆணைகள் இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அமலுக்கு வரும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**தேபேந்திரநாத் சாரங்கி**

அரசுச் செயலர்